**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 60/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 1 |
| Name (திரு/திருமதி) | : | வேல்முருகன் |
| Father's Name/ Husband's Name | : | ரங்கசாமி |
| Village & Taluk | : | கோடிக்கொள்ளை |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

(1 முதல் 7 மற்றும் 9ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) 8ம் எதிரி சட்டத்திற்கு முரண்பட்ட சிறுமி என்பதால் அவர் மீதான வழக்கு JJB க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

1. இந்த வழக்கின் எதிரிகளான காந்தி, ராணி, பெருமாள் (எ) களிவரதன், கனேசன், மல்லிகா, பாக்கியம், சங்கர், ஏழுமலை மற்றும் ரேவதி ஆகியோர்களை எனக்கு தெரியும். மேற்படி நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தால் என்னால் அடையாளம் காண்பித்திருக்க முடியும். கடந்த 02.11.2011ம் தேதியன்று காலை சுமார் 10.00 – 11.00 மணிக்குள் ஊர் பொதுமக்களுடன் சேர்ந்து மயானப்பாதையை அமைத்துக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி காந்தி என்பவரின் நிலத்திற்கு அருகே உள்ள ஓடை புறம்போக்கை சீர் செய்து மயானப்பாதை அமைக்க முற்பட்டபோது காந்தி என்பவர் கொடுவா கத்தியை காண்பித்து இங்கு பாதை அமைக்க கூடாது மீறி அமைத்தால் வெட்டிவிடுவேன் என மிரட்டினார். எதிரி ராணி என்பவர் துடைப்பம் எடுத்து வந்து அடிக்க முற்பட்டார். எதிரி பெருமாள், கனேசன், மல்லிகா, பாக்கியம், சங்கர் மற்றும் ஏழுமலை ஆகியோர்கள் என்னை கொம்பால் அடித்துவிட்டனர். அதில் எனக்கு சிறிதளவு காயங்கள் ஏற்பட்டது. அதன் பின்னிட்டு நான் வளத்தி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. பட்டியல் சாட்சிகள் 2 முதல் 9 வரையானவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். 1ம் எதிரியின் காந்தியும் எனது உறவினர் தான். சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே 1ம் எதிரிக்கு பட்டா நிலம் உள்ளது. அந்த இடத்தில் எனக்கு பட்டா நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் நான் ஊர் நாட்டான்மையாக இருந்தேன். மயானபாதை அமைக்கும் விவரம் ஊராட்சிமன்ற தலைவருக்கும் அப்போது தெரியும். சம்பவத்தின்போது அவர் அங்கில்லை. கடந்த 2011ம் வருடம் நான் கவுன்சிலர் பதவிக்காக போட்டியிட்டேன் என்றால் இல்லை. நான் வேறு ஒரு பகுதியில் நான் கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தேன்.

2. சம்பவ இடத்திற்கு அருகில் எனது மைத்துனர் ரமேஷ் என்பவருக்கு பட்டா நிலம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் தேதியில் காலை 8.00 மணியளவில் நானும் எனது உறவினர்களும் எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீது வளத்தி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அதன் பேரில் குற்ற எண்.07/2012 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் சம்பவம் அதே தேதியில் காலை 09.00 மணியளவில் நடைபெற்றது என்றால் சரிதான்.

3. சம்பவ சமயத்தில் நான் பா.ம.க கட்சியின் மாவட்ட தலைவராக பொறுப்பு வகித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் மீது காவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். புகார் கொடுக்கப்பட்டு எத்தனை நாட்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரின் மீது விசாரணை செய்த காவலர்கள் புகாரில் உண்மைத்தன்மை இல்லை என அறிந்து முதலில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றாலும், நான் என்னுடைய அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிய செய்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நான் சொல்வது போல் உண்மையில் நடைபெற்றிருந்தால் காவலர்கள் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் எந்த எதிரி எந்த ஆயுதத்தால் என்னை எங்கு தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட இயலவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியதற்காக நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

4. மயான பாதைக்கு செல்வதற்காக சம்பவத்திற்கு முன்னிட்டு வழி இல்லை என்றால் ஓடை வழியாக சென்று கொண்டிருந்தனர். எனவே தான் பாதை அமைத்தோம். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் மயானபாதையை அமைத்திருந்தால் அங்கு ஊராட்சி மன்ற தலைவர் இருந்ததிருப்பார் என்றாலும் சரியல்ல. அப்போது ஊராட்சி மன்ற துணைத்தலைவரான எனது சகோதரர் அங்கு தான் இருந்தார். மயானப்பாதை அமைத்தபோது ஊராட்சி மன்ற தலைவர் அங்கு இல்லை. பாதை

அமைப்பது சம்பந்தமாக எழுத்துமூலமான தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றால் ஊர் பொதுமக்களை கூட்டி முடிவு எடுக்கப்பட்டதால் தீர்மானம் போடப்படவில்லை. எனது மைத்துனர் ரமேஷ் என்பவரின் நிலத்திற்கு செல்வதற்காக வழி இல்லை என்பதற்காக எதிரிகளின் அனுபவத்தில் இருந்த இடத்தில் மரத்தை வெட்டினோம் என்றாலும் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி அவர்கள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.